**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**

**STC 67/2026**
LW PW

| | | | |
|---|---|---|---|
| Name | ராதாகிருஷ்ணன் | Caste | |
| Father's/Husband Name | ராமகிருஷ்ணன் | Calling | உதவி ஆய்வாளர் ( ஓய்வு ) |
| Village | | Religion | |
| Taluk | | Age | 61/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **2nd day of July 2026**

Signature of witness.

**எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.**
**குறுக்கு விசாரணை**

1. குற்ற எண் 38/2026 வழக்கிலும் நான் சாட்சியா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கின் எதிரியை எந்த தேதியில் கைது செய்தோம் என்றால் 17.02.2026ம் தேதியில் கைது செய்தோம். யாருடைய உத்தரவின் பேரில் எதிரியை சம்பிராதய கைது செய்தேன் என்றால் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர்களின் எழுத்து மூலமான உத்தரவுப்படி கைது செய்தேன். குற்ற எண் 38/2026 ல் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

2. ஆய்வாளர் என்னை விசாரித்த தேதி என்னவென்றால் 28.02.2026 ம் தேதியில் விசாரித்தார் என்று நினைக்கிறேன். எதிரியின்

மீது வேளாங்கண்ணி காவல் நிலைய காவலர்களுக்கு இருந்த முன் பகையின் காரணமாக பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/– ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**STC 67/2026**
LW 6 PW 6

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வி | Caste | |
| Father's/Husband Name | வெங்கடேசன் | Calling | காவல் ஆய்வாளர் வேளாங்கண்ணி காவல் நிலையம் |
| Village | | Religion | |
| Taluk | | Age | 47/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd **day of July 2026**

Signature of witness.

**எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.**
**முதல் விசாரணை**

**1.**நான் தற்பொழுது வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.02.2025 ம் தேதி பொறுப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்த ஆய்வாளர் திருமதி. சுப்ரியா அவர்கள் பதிவு செய்து முதல் கட்ட விசாரணை மேற்கொண்டிருந்த குற்ற எண் 82/2025 வழக்கு கோப்பினை எனது மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு வழக்கில் தனிஅறிக்கை அளித்த காவலர் சங்கீதா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் லோகநாதன், தலைமை காவலர் ரமேஷ் ஆகியோர்கள் ஆய்வாளர் சுப்ரியா அவர்களிடம் கூறிய விபரங்களையே என்னிடம் கூறியதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

2. வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி வேளாங்கண்ணி குற்ற எண் 38/2026 என்ற வழக்கில் திருச்சி மத்திய சிறையில் இருந்தவரை வேளாங்கண்ணி காவல் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின் படி உதவி ஆய்வாளர் திரு. ராதாகிருஷ்ணன்

அவர்கள் 17.02.2026 அன்று சிறை அலுவலர்கள் முன்னிலையில் திருச்சி மத்திய சிறையில் சம்பிராதய கைது செய்தார். பின்னர் 23.02.206 அன்று P.T. Warrant மூலம் இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். சம்பிரதாய கைது செய்த உதவி ஆய்வாளர் திரு. ராதாகிருஷ்ணன் அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் கட்ட விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர் சுப்ரியா அவர்களிடம் எனது விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக 28.02.2026 ம் தேதி 269 BNS படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** அ.சா. 1 மற்றும் அ.சா. 2 ஐ எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் 13.02.2026 எங்கள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணனை எப்பொழுது விசாரித்தேன் என்றால் 28.02.2026 ம் தேதி விசாரித்தேன். வழக்கை கோப்பினை விசாரணைக்காக எந்த தேதியில் பெற்று கொண்டேன் என்றால் கடந்த 2025ம் ஆண்டு ஜுன் மாதத்தில் பெற்று கொண்டேன். தேதி சரியாக ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாளிலிருந்து நான் பணியில் சேர்ந்த நாள் வரை வழக்கின் புலன் விசாரணை எதுவும நடைபெறவில்லை என்றால் அதுவரை எதிரியை தேடி வந்தார்கள்.

2. எதிரியை எங்கெல்லாம் தேடினார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றாலும் வழக்கு நாட்குறிப்பில் அது குறித்த குறிப்பு எதுவும் உள்ளதா என்றாலும் ஆய்வாளர் அது குறித்து குறிப்பு எதுவும் எழுதவில்லை. குற்ற எண் 38/2026 எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றாலும் எதிரியை எந்த தேதியில் கைது செய்தோம் என்றாலும் 07.02.2026ம் தேதி ஆகும். குற்ற எண் 38/2026 வழக்கின் புலன் விசாரணை அதிகாரி யார் என்றால் நான் தான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும் நான்தான். எதிரி மீது வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் மூன்று Arms Act வழக்குகள் பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரின் அடிப்படையில் மூன்று வழக்குகள் பதியப்பட்டுள்ளது.

3. வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் வழக்கு கால கட்டத்தில் பல வழக்குகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்தது

என்றால் சரிதான். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. பல வழக்குகளில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ள எதிரிகளின் மீது இந்த எதிரியின் மீது பதிவு செய்துள்ள சட்டப்பிரிவு 269 BNS வழக்கு போல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள பிடியாணை வழக்குகளில் சட்டப்பிரிவு 269 BNS பிரிவின் படி வழக்கு பதியப்பட்டுள்ளது. இவ்வழக்கின் எதிரி பல்வேறு வாய்தாக்களுக்கு வராமல் மனு கொடுத்து விட்டு, பின்னர் மனு கொடுக்காத நாளில் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து கொடுத்ததில் தான் இவ்வழக்கு எதிரி மீது பதிவு செய்தோம்.

4. அமர்வு நீதிமன்ற வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அன்று சாட்சிகள் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அமர்வு நீதிமன்ற வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு அடுத்த வாய்தா எப்போது போடப்பட்டது என்றால் 11.03.2025 ஆகும். பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தேதி 18.02.2025 ஆகும். எதிரிக்கு மேற்படி பிடியாணை ரத்து செய்வதற்ககாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு காலம் கொடுக்கப்படாமல் உடனடியாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால், பிடியாணை பிறப்பிக்கப்பட்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கையை தான் எடுத்தோம். அமர்வு நீதிமன்றத்தில் பிடிவாரண்ட் எந்த தேதியில் பெறப்பட்டது என்றால் 19.02.2025 ம் தேதி பெண் காவலர் சங்கீதா அவர்களால் பெறப்பட்டது.

5. 18.02.2025 ம் தேதியில் அமர்வு நீதிமன்றத்தில் எதிரியின் வழக்கறிஞர் தனது வக்காலத்தை திரும்ப பெற்றதால் தான் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. குற்ற எண் 38/2026 வழக்கில் எதிரியை எங்கு கைது செய்தோம் என்றால் ரெட்டாலடி பாலம் அருகில் 07.02.2026 ம் தேதியில் கைது செய்தோம். நான் எதிரியை சென்னையில் வைத்து கைது செய்து விட்டு, தற்போது வழக்கிற்காக ரெட்டாலடி பாலத்தின் அருகில் கைது செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் அவர்களும் குற்ற எண் 38/2026 ல் சாட்சியாக உள்ளார் என்றால் அது குறித்து தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

6. எதிரி மீது எங்கள் காவல் நிலைய காவலர்களுக்கு இருந்த தனிப்பட்ட விரோதம் காரணமாக அவர் மீது பல பொய் வழக்குகள் தொடர்ச்சியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரின்

அடிப்படையில் தான் அவர் மீது பல வழக்குகள் பதிவு செய்யப்பபட்டது. எங்கள் காவல் நிலைய காவலர்களால் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கில் வழக்கு பதிவு செய்து வைத்திருந்தார்கள் என்றாலும் இந்த வழக்கை நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக இயந்திர கதியில் செயல்பட்டு இந்த இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் நீதிமன்றத்தில் ஆஜராகமால் இருந்தார் என்றாலும் இந்த விபரங்கள் தெரிந்தும் எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/– ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்வேளூர்.